## சுருக்கம்

வேளாண்மைத்துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – 25.08.2015 அன்று சட்டப் பேரவையில் நடைபெற்ற 2015–2016–ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின் போது (கோரிக்கை எண்.5) மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி கிராமத்தில் புதிதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தோற்றுவிக்கப்பட்டதை தொடர்ந்து, அவ்வொழுங்குமுறை விற்பனை கூடம் செயல்படுவதற்கென அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டிடம் உள்ளிட்டவற்றை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் அமைக்க வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையருக்கு அனுமதி அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### வேளாண்மைத் (வேவி2(2) துறை

அரசாணை (நிலை) எண். 133 நாள் 23 .05 2017

திருவள்ளுவர் ஆண்டு 2048
வைகாசி திங்கள் 9–ம் நாள்

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.185, வேளாண்மை (வே.வி2 (1)) துறை, நாள். 31.08.2015.
2. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடித எண். விகுதி.3/ 23687/ 2016, நாள் 04.01.2017.
3. அரசு கடித எண்.5887/வே.வி.2(2)/2016, நாள். 17.04.2017.
4. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடித எண். விகுதி.3/ 23687/2016, நாள் 28.04. 2017.

-----

**ஆணை:–**

25.08.2015 அன்று சட்டப் பேரவையில் நடைபெற்ற 2015–2016–ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத்துறையின் மானியக் கோரிக்கையின் போது (கோரிக்கை எண்.5) மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

> "சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஒன்பதுக்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்க, அப்பகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இல்லாததால், இப்பகுதி விவசாயிகள் நலன் கருதி, வெள்ளரிவெள்ளி கிராமத்தில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்".

2) இவ்வறிவிப்பினை நிறைவேற்றுவது தொடர்பாக வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரை கலந்தாலோசிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர் மேலே படிக்கப்பட்ட தம்முடைய கடிதங்களில், அரசாணை (நிலை) எண்.185, வேளாண்மைத் (வேவி.2) துறை, நாள் 31.08.2015–இன்படி சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி கிராமத்தில் புதியதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தோற்றுவித்து 1987–ஆம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 6(1)இன்படி அறிவிக்கை வெளியிடப்பட்டது என்றும், தற்போது வெள்ளரிவெள்ளி கிராமத்தில் புதியதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் செயல்பட ஏதுவாக கட்டிடம் உள்ளிட்ட பணிகளை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசின் நிர்வாக அனுமதி வழங்கிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன், இதுதொடர்பாக சேலம் விற்பனைக்குழுவால் தீர்மானம் எண்.149/2015–2016, நாள் 18.12.2015–இன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3) 1987–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் வாணிப (முறைப்படுத்துதல்) சட்டத்தில் உள்ள சட்டப் பிரிவு 6(2)–இன்படி சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி கிராமத்தில் புதியதாக தொடங்கப்படவுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கான விற்பனைப் பகுதிகள் தமிழ்நாடு அரசிதழ் எண்.8, நாள் 22.02.2017–இன் வாயிலாக அறிவிக்கையிடப்பட்டுள்ளன.

4) எனவே, வெள்ளரிவெள்ளி கிராமத்தில் புதியதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் செயல்பட ஏதுவாக அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலக கட்டிடம், ஊரக கிட்டங்கி, பரிவர்த்தனைக் கூடம், உலர்களம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு செயற்பொறியாளர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகவும், அதன்படி இப்பணிக்கு நிர்வாக ஒப்புதல் 2016–17–இல் வழங்க காலதாமதம் ஏற்படுமாயின் அடுத்த நிதியாண்டிற்கு (2017–2018) கூடுதலாக 10% சதவீதம் சேர்த்து மொத்தமாக ரூ.275.00 இலட்சம் தேவைப்படும் என முன்னதாக கணக்கிடப்பட்டது என்றும், இருப்பினும் நடப்பு நிநியாண்டிற்கு (2016–2017) ஏதுவாகத் திருத்தம் செய்யப்பட்டு ரூ.250.00 இலட்சமாக இறுதி செய்யப்பட்டதாகவும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் தெரிவித்துள்ளார்.

5) மேலும், எடப்பாடி வட்டாரத்தில் சாகுபடி செய்யப்படும் வேளாண் விளைபொருள்களில் தேவைக்குபோக மீதமுள்ள அனைத்து விளைபொருள்களையும் அருகில் உள்ள விற்பனைக்கூடங்கள் மற்றும் பக்கத்து மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு விவசாயிகள் எடுத்து சென்று விற்பனை செய்வதாலும், இடைத்தரகர்களின் இடையூறின்றி விவசாயிகளின் விளைபொருட்களை விற்பதற்கு ஏதுவாக எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பது மிகவும் அவசியமானதாகும் என்று தெரிவித்து, இவ்விற்பனைக் கூடத்திற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகம், உலர்களம், கழிப்பிட வசதி, ஊரக கிட்டங்கி வசதி, அணுகுசாலை, சுற்றுச்சுவர் மற்றும் பரிவர்த்தனைக்கூடம் ஆகிய அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க 2017–2018–ஆம் நிதியாண்டில் “கட்டிடம் கட்டுதல்” என்ற தலைப்பில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து, இப்பணியினை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், இச்செலவினத்தை சேலம் விற்பனைக்குழுவின் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணிகளை தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரிய பொறியியல் பிரிவின் மூலம் மேற்கொள்ளவும் அரசின் நிர்வாக அனுமதி வழங்கிடுமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த.பி.பா)

6) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் மேற்குறிப்பிட்ட கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளரிவெள்ளி கிராமத்தில் புதிதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் செயல்பட ஏதுவாக அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலக கட்டிடம், ஊரக கிட்டங்கி, பரிவர்த்தனைக் கூடம், உலர்களம் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவற்றை ரூ.2.50 கோடி (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் அமைப்பதற்கும் இச்செலவினத்தை சேலம் விற்பனைக்குழுவின் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணிகளை தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்தின் பொறியியல் பிரிவின் மூலமாக மேற்கொள்வதற்கும் 1991–ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் (முறைப்படுத்துதல்) விதிகளில் உள்ள விதி எண்.96–ன் படி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7) இவ்வரசாணை, நிதித்துறையின்அ.சா.எண்.14085/வேளாண்மை/ 2017, நாள் 07.04.2017–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி,**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32.
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை–32.
விற்பனைக்குழு செயலாளர், சேலம் (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32 வழியாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை–35. (பெயரில்)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை–108.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காயர் அலுவலகம், பொது மற்றும் சமூக தணிக்கைப்பிரிவு, சென்னை–9.

<u>நகல்</u>:–
நிதித் (வேளாண்மை)துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு3) துறை, சென்னை–9 (அட்டவணைப்படுத்தும் வகைக்கு)
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், வேளாண்மைத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

23/5/17
பிரிவு அலுவலர்.

23/05/17